இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 08 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆவணி 02 – திங்கள்கிழமை 18 ஆகஸ்ட் 2025 – சென்னை 28 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 08 : Thiruvalluvar Year - 2056 - Aavani 02 - Monday 18 August 2025 - Chennai 28 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.8.2025) தருமபுரியில், ஒன்றிய முன்னாள் அமைச்சர் முரசொலிமாறன் அவர்களின் பிறந்தநாளையொட்டி அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

### முத்தமிழறிஞர் கலைஞரின் மனச்சாட்சியாகத் திகழ்ந்தவர் – மாநில சுயாட்சி உள்ளிட்ட

## கருத்துக் கருவூலங்களை நமக்களித்த முரசொலி மாறனை நன்றியோடு நினைவுகூர்ந்து வணங்குகிறேன்!

### முரசொலி மாறன் 92வது பிறந்த நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமித பதிவு!

**சென்னை, ஆக. 18 -**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மனச்சாட்சியாகவே திகழ்ந்தவர், திராவிட இயக்க வரலாறு, ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்? - மாநில சுயாட்சி எனக் கால வெள்ளத்தில் கரைந்திடாக் கருத்துக் கருவூலங்களை மக்களுக்காக வழங்கிச் சென்றிருக்கும் அவரது பணிகளை நன்றியோடு நினைவுகூர்ந்து வணங்குகிறேன், என்று முரசொலி மாறன் அவர்களின் 92வது பிறந்த நாளையொட்டி கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிந்துள்ள சமூக வலைதளப் பதிவில் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.**

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**எளிய வேளாண் குடும்பத்தில் தியாகராஜ சுந்தரமாகத் தோன்றி, முத்தமிழறிஞர் கலைஞரின் தோளில் வளர்ந்து, அவரால் நெடுமாறன் எனப் பெயர்மாற்றமும் பெற்று, அவ்வுயிர்நிகர் தலைவரின் மனசாட்சியாகவே திகழ்ந்து,**

**இந்திய ஒன்றியத்தின் வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சராக ஏற்றமும் கண்ட மதிப்புக்குரிய முரசொலி மாறன் அவர்களின் பிறந்தநாள்...**

**இதழியல், திரைப்படம், அரசியல் எனக் களம்கண்ட அனைத்துத் துறைகளிலும் தனிமுத்திரை பதித்து; திராவிட இயக்க வரலாறு, ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்?, மாநில சுயாட்சி எனக் கால வெள்ளத்தில் கரைந்திடாக் கருத்துக் கருவூலங்களை நமக்காக வழங்கிச் சென்றிருக்கும் அவரது பணிகளை நன்றியோடு நினைவுகூர்ந்து வணங்குகிறேன்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

### தமிழுக்கு – தமிழ்நாட்டிற்கு – தமிழர்க்கு எதிராக மலிவான அரசியல் செய்கிறார் – உண்மைக்குப் புறம்பாகப் பேசி மக்களிடையே பீதியைக் கிளப்புகிறார்!

# அவதூறுகளைப் பரப்புவதே ஆளுநரின் வேலை!

### தருமபுரியில் நலத்திட்ட உதவிகள் வழங்கிய விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**தருமபுரி, ஆக. 18 -**

**கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.8.2025) தருமபுரியில் நடைபெற்ற அரசு விழாவில், முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி உரையாற்றுகையில், "அவதூறுகளைப் பரப்புவதே ஆளுநரின் வேலை" என்று குறிப்பிட்டார்.**

விழாவில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

தருமபுரி மாவட்ட அரசு விழாவில் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

வரலாற்றுப் பெருமையும், எழில் மிக்க ஒகேனக்கல்லும் இருக்கும் இந்த தருமபுரி மாவட்டத்தில், 362 கோடியே 77 இலட்சம் ரூபாய் மதிப்பிலான ஆயிரத்து 73 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 512 கோடியே 52 இலட்சம் ரூபாய் மதிப்பிலான ஆயிரத்து 44 திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 70 ஆயிரத்து 427 பேருக்கு 830 கோடியே 6 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி, உங்களையெல்லாம் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்!

இந்த மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள், அவரை அனைவரும் வேங்கையின் மைந்தன் என்று அழைப்பார்கள்; வேங்கையின் மைந்தனாக மட்டுமல்ல, வேளாண்மையின் மைந்தனாவும் தமிழ்நாட்டின் மண்ணும், மக்களும் செழிக்க நாளும் உழைத்து, அரசுத் துறையில் சாதனை மேல் சாதனை படைத்துக் கொண்டிருக்கிறார்! அவருக்கும், அவருக்குத் துணை நிற்கக்கூடிய மக்கள் பிரதிநிதிகள், மாவட்ட ஆட்சியர் சதீஷ் அவர்களுக்கும், அரசு அதிகாரிகளுக்கும் என்னுடைய பாராட்டுக்களை, வாழ்த்துகளை உங்கள் அனைவரின் சார்பில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.8.2025) தருமபுரியில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு துறைகளின் சார்பில் 70,427 பயனாளிகளுக்கு 830 கோடியே 6 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி, சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி.வெங்கடேஷ்வரன், வேளாண்மை – உழவர் நலத்துறை செயலாளர் தட்சிணாமூர்த்தி,சிப்காட் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கி.செந்தில்ராஜ், வேளாண்மை இயக்குநர் பா.முருகேஷ். தோட்டக்கலைத்துறை இயக்குநர் குமரவேல் பாண்டியன், தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் ரெ.சதீஷ், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**விண்ணப்பித்த அன்றே விவசாயிகளுக்கு பயிர்க்கடன்!**

இந்த நிகழ்ச்சிக்கு வருவதற்கு முன்பு, இந்தியாவிலேயே இல்லாத அளவுக்கு முதல் முறையாக ஒரு முக்கியமான திட்டத்தை வேளாண் பெருங்குடி மக்களுக்காக திறந்து வைத்துவிட்டு வந்திருக்கிறேன். விவசாயப் பெருங்குடி மக்கள் பயிர்க்கடன் பெறத் தொடர்புடைய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு நேரடியாக சென்று விண்ணப்பித்து, அந்தக் கடனைப் பெற ஒரு வாரம் வரை காத்திருக்கின்ற நடைமுறைதான் இப்போது இருக்கிறது. இந்த நடைமுறையை மாற்றி, விவசாயிகள் நலன் கருதி காலதாமதத்தை தவிர்க்க, கூட்டுறவு வங்கிகளுக்கு செல்லாமல் வீட்டில் இருந்தபடியே, ஆன்லைன் மூலமாக பயிர்க்கடனுக்கு விண்ணப்பிக்கின்ற நடைமுறையையும், விண்ணப்பித்த அன்றைக்கே விவசாயிகளின் வங்கிக் கணக்கில் பயிர்க்கடன் நேரடியாக வழங்குகின்ற நடைமுறையையும் இந்த தருமபுரியில், துவக்கி வைத்துவிட்டு இங்கே வந்திருக்கிறேன்.

தருமபுரியின் வளர்ச்சி என்றாலே, அது திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் தான்! அந்தளவுக்கு ஏராளமான திட்டங்கள் நம்முடைய ஆட்சிக்காலத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது! ஒரே ஒரு எடுத்துக்காட்டை நான் சொல்ல வேண்டும் என்றால், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம்!

தருமபுரி கிருஷ்ணகிரி மாவட்ட மக்களின் குடிநீர் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு 2008ல் தலைவர் கலைஞர் உருவாக்கிய அந்தத் திட்டம், அன்றைக்கு உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த என்னுடைய மேற்பார்வையில்தான் நடைபெற்றது.

மூன்று நகராட்சிகள் 16 பேரூராட்சிகள் 7 ஆயிரத்து 639 ஊரக குடியிருப்புகளில் வாழும் மக்களுக்கு குடிநீர் வழங்குகின்ற இந்த திட்டத்தை ஆயிரத்து தொள்ளாயிரத்து 29 கோடி ரூபாய் மதிப்பீட்டில், ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் செயல்படுத்தினோம்!

இந்த திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளை இப்போது நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில், 7 ஆயிரத்து 890 கோடி ரூபாய் செலவில் செய்து கொண்டிருக்கிறோம்!

**தருமபுரி - கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கு திட்டங்கள்!**

தருமபுரி - கிருஷ்ணகிரி மாவட்ட மக்களுக்காக தி.மு.க. ஆட்சிக்காலத்தில் செய்யப்பட்ட மேலும் பல திட்டங்களில் முக்கியமான சிலவற்றை தலைப்புச் செய்திகளாக சொல்ல வேண்டும் என்றால்,

- தருமபுரி தொழிற்பேட்டை
- பெரும்பாலையில் அகழ்வாய்வு
- ஏரியூரில் அரசு கலை அறிவியல் கல்லூரி
- பர்கூரில் நெடுங்கல் பாசன கால்வாய் புனரமைப்பு திட்டம்
- வாணியாறு, பாம்பாறு, சூளகிரி சின்னாறு திட்டங்கள் புனரமைப்பு
- மாரண்டஅள்ளி, தும்பள அள்ளி கால்வாய் மேம்பாட்டு திட்டம்
- ஈச்சம்பாடி அணை மற்றும் கால்வாய்கள் மேம்பாட்டுத் திட்டம்
- சிமெண்ட் தொழிற்சாலை
- வள்ளல் அதியமான் கோட்டம்
- விடுதலைப் போராட்ட வீரர் சுப்பிரமணிய சிவா அவர்களுக்கு நினைவு மண்டபம் என்று ஏராளமான திட்டங்களை செய்திருக்கிறோம்.

அதன் தொடர்ச்சியாகதான் இப்போது நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில்,

- அதியமான் கோட்டை 98 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது.
- ஒகேனக்கல் சுற்றுலா மேம்படுத்தப்பட்டு இருக்கிறது.
- தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஒருங்கிணைந்த பேறுகால அவசர சிகிச்சை மற்றும் சிசு தீவிர சிகிச்சை பராமரிப்பு மையம் அமைக்கப்பட்டிருக்கிறது.
- பேருந்து வசதியே இல்லாத 8 கிராம மக்கள் போக்குவரத்து வசதி பெற, வத்தல்மலைக்கு முதன்முதலாக பேருந்து வசதி செய்து தரப்பட்டிருக்கிறது.
- 40 புதிய பேருந்துகள் இயக்கப்பட்டிருக்கின்றன.
- ஆயிரத்து 297 கோடியே 40 இலட்சம் ரூபாய்க்கு சாலைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.
- ஆயிரத்து 714 கோடியே 4 இலட்சம் ரூபாயில், வளர்ச்சி திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.
- பொதுப்பணித்துறை சார்பில், 30 கோடியே 8 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பணிகள் நடைபெற்றிருக்கிறது.
- சுற்றுலாத்துறை சார்பில், 19 கோடியே 81 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பணிகள் நடைபெற்றிருக்கிறது.
- நார்த்தம்பட்டி ஊராட்சியில், மரகதப் பூஞ்சோலை உருவாக்கப்பட்டிருக்கிறது.
- பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளில், தண்ணீர் தொட்டிகள் கட்டப்பட்டிருக்கிறது.

இந்த மாவட்ட மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையான சிப்காட் தொழில்பூங்கா திட்டம் இன்று திறக்கப்பட்டிருக்கிறது. தருமபுரி தொழில் பூங்காவுக்கு ஆரம்பகட்ட பணிகளான அணுகு சாலை மற்றும் நுழைவாயில் தகவல் பலகை, தெரு விளக்குகள் மற்றும் இதர பணிகள் அமைக்கும் பணி 12 கோடியே 39 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் முடிக்கப்பட்டிருக்கிறது. இதில், அடுத்த கட்டமாக 200 ஏக்கர் பரப்பளவில் உட்கட்டமைப்புப் பணிகள்,

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்